**செ. கு. எண்: 227** **நாள்: 07.12.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>

<u>அவர்களின் அறிக்கை – 7.12.2018</u>

**மணிமுத்தாறு** பிரதான கால்வாயின் விதிமுறைகளின்படி 2017–2018ல் பிரதான கால்வாய் 1வது மற்றும் 2–வது ரீச்சுகளின் கீழ் உள்ள குளங்களுக்கு முன்னுரிமை அளித்து பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கப்பட்டதால் தற்சமயம் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தின் சாதகமான நீர்நிலையை கருத்தில் கொண்டு பிரதானக் கால்வாயின் பாசன விதிமுறைகளின்படி இந்த ஆண்டு (2018–2019) பிரதானக் கால்வாயில் 3–வது மற்றும் 4வது ரீச்சுகளின் கீழ் உள்ள அனைத்து ஆயக்கட்டுகளுக்கும் முன்னுரிமை அளித்து பாசனத்திற்கு தண்ணீர் கொடுப்பதற்காக **11.12.2018 முதல் 31.3.2019 வரை 111** நாட்கள் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தைப் பொறுத்து மணிமுத்தாறு பிரதானக் கால்வாயில் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், மணிமுத்தாறு அணையிலிருந்து தாமிரபரணி பாசனப் பரப்பில் உள்ள ஆயக்கட்டுகளின் நீர்த் தேவையினை பூர்த்தி செய்வதுடன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சேரன்மகாதேவி, நாங்குநேரி, திசையன்விளை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ராதாபுரம், திருவைகுண்டம், திருச்செந்தூர், ஏரல் மற்றும் சாத்தான்குளம் ஆகிய வட்டங்களில் உள்ள **12,018 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**